**தேதி - 24.11.2022 அசல் வழக்கு எண்.17/2016 வா.சா.1 (சர்தார்பாட்சா)**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

ரிலையன்ஸ் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் வீடுகட்டுவதற்காக 1 ம் பிரதிவாதி எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் நானும், என்னுடைய மகளும் சேர்ந்து மேற்படி கடனை வாங்கினோம். மேற்படி விபரத்தை வழக்குரையில் கூறியுள்ளேன். எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் ரிலையன்ஸ் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் வாங்கினோம் என்ற விபரத்தை பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆனால் தேதி ஞாபகமில்லை. ரிலையன்ஸ் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் 2010 ம் வருடம் கடன் வாங்கியதாக ஞாபகம். நானும், என்னுடைய மகளும் சேர்ந்து ரிலையன்ஸ் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் வாங்கினோம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், என்னுடைய மகளும் சேர்ந்து கடன் வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் கடன் வாங்கியது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மேற்படி கடன் வாங்கிய விபரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகளும், 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து கடன் வாங்கிய விபரத்தை தெரிந்து கொண்டு நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள இரண்டாம் மாடியை கட்டுவதற்கு பஜாஜ் அலையன்ஸ் நிறுவனத்தில் 1 ம் பிரதிவாதி எவ்வளவு கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி பஜாஜ் அலையன்ஸ் நிறுவனத்திற்கு மாத மாதம் எவ்வளவு கடன் தொகை செலுத்தி வருகிறார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்திற்கு வரி என்னுடைய மகள் பர்வீன்பானு பெயரிலுள்ளது. தாவாச் சொத்துக்களின் அசல் கிரையப்பத்திரங்கள் அனைத்தும் ரெப்கோ வங்கியில் அடைமானத்தில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் தாவாச் சொத்தின் அசல் ஆவணங்கள் ரெப்கோ வங்கியில் இருப்பதாக தான் குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கிற்காக அசல் ஆவணங்கள் ரெப்கோ வங்கியில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் என்னுடைய மகள் டெங்கு காய்ச்சலால் இறந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடாத சங்கதிகளை நான் தாக்கல் செய்துளள பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகள் டெங்கு காய்ச்சலால் இறந்ததாக வா.சா.ஆ.16 ல் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொனனால் சரியல்ல. காய்ச்சலில் தான் இறந்தார். என்னுடைய மகள் காய்ச்சலில் தான் இறந்ததை

என்பதை காண்பிக்க மருத்துவசான்றாவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. மேற்படி மருத்துவஆவணங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி வசம் உள்ளது. மேற்படி மருத்துவஆவணங்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதி எடுத்துச் சென்றுவிட்டார் என்பதை குறித்து வா.சா.ஆ.16லும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவஆவணங்களை 1ம் பிரதிவாதி எடுத்து சென்றுவிட்டார்.1ம் பிரதிவாதி இரண்டாவது திருமணம் செய்ய நான் சம்மதித்து ஜமாத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு நாங்கள் சென்றோம். ஆனால் முழுமனதுடன் செல்லவில்லை. 1ம் பிரதிவாதிக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்க நான் தான் முழுமையாக ஈடுபட்டேன் என்றும், தற்போது வழக்கிற்காக முழுமனதுடன் 1ம் பிரதிவாதியின் இரண்டாவது திருமணத்திற்கு செல்லவில்லை என்று பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆன 1ம் பிரதிவாதியின் இரண்டாவது மனைவியின் தகப்பனாரை நான் அடித்து காயப்படுத்தியதாக முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்ட நிலையில் அதற்கான தீர்ப்புரையின் நகலை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் குடியிருக்கும் தரைதளத்தை வாடகைக்கு விட்டால் எவ்வளவு வருமானம் வரும் என்றால் என்னுடைய சொந்தவீடு என்பதால் அதுகுறித்து எனக்கு கூற விருப்பமில்லை. நான் குடியிருக்கும் தரைதளம் என்னுடைய சொந்தவீடு என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என்னுடைய மகள் பெயரில் வீடு உள்ளது. வங்கியில் நான் பணம் செலுத்தியதற்கான இரசீதுகள் உள்ளது. வா.சா.ஆ.22 ஆன ஆவணத்தின் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்துள்ள நிலையில் அதற்கான அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் ஜமாத்தில் உள்ளது. வா.சா.ஆ.22 ஆன ஆவணத்தை தற்போதுள்ள மதுரை மகபூப்பாளையம் ஜமாத்திலுள்ள தலைவர் கொடுத்துள்ளார். அவருடைய பெயர் நிஜாம்அலிகான் ஆகும். வா.சா.ஆ.22 ஆன ஆவணத்தில் நிஜாம்அலிகான் ஆவணத்தை கொடுத்தார் என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.22ல் 4வது பக்கத்திலுள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. வா.சா.ஆ.22 ஆவணத்தை கொடுத்த ஜமாத் தலைவரை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தற்போதுள்ள தலைவரையும், பழைய தலைவரையும் வைத்து விசாரிக்க முடியுமா என்றால் முடியும். வா.சா.ஆ.22 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதிலுள்ள தேதிகள் மற்றும் சரத்துக்கள் என்னால் தயார் செய்யப்பட்டு வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றும் சொன்னால்

சரியல்ல. என்னுடைய மகளின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். தாவாச் சொத்தின் தரைதளத்தில் 2014 ம் வருடம் முதல் நாளது தேதி வரை எந்தவிதமான வாடகையும் செலுத்தாமல் எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் அனுபவம் செய்து வருவதால் நான் 1ம் பிரதிவாதிக்கு நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்பதால் தாவாச் சொத்திலுள்ள தரைதளத்தை காலி செய்து 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.